**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 130 of 2018

Deposition of P.W. 1

Name of the Witness: *திருமதி.சுமதி*

Date : 12.02.2025

***1, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

5) என் கணவர் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து 2020ல் ஓய்வு பெற்றார். நான் பாப்பாரப்பட்டியில் 5வது கிராசில் போலிஸ்காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு என்னுடைய சொந்தவீடு. அந்த வீட்டை கட்டி 3 வருடம் இருக்கும். எனது கணவர் ஓய்வு பெற்ற பிறகு கட்டினேன். எனக்கு 3 பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் கருனாம்பிகை, கார்த்திகா. விக்னேஷ். என் பெரிய மகள் கருணாம்பிகைக்கு எப்போது திருமணமானது என்று சரியாக நியாபகம் இல்லை.

6) நான் தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் பாகம் கேட்டு ஏற்கனவே ஓ.எஸ்.198/2012 என்ற வழக்கு போட்டுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கை லதா பேரில் மட்டும் தான் நான் போட்டேன். அந்த வழக்கில் நாம் பேசி முடிவு பண்ணிக் கொள்ளலாம் என்று லதா சொன்னதால் நான் அந்த வழக்கை வாபஸ் பெற்று விட்டேன். சக்தி பெயரில் நான் அந்த வழக்கை போட்டேனா என்று நியாபகம் இல்லை. நான் பேசி தீர்த்துக்கொண்டோம் என்று சொல்லி வழக்கை வாபஸ் பெற்றேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் குமாரசாமிபேட்டையில் இருக்கும் வீடு, ஓசூரில் எனது அப்பா பெயரில் இருந்த பிளேட், லதா குமாரசாமிபேட்டையில் கட்டியிருக்கும் வீட்டின் பேரிலும், வெள்ளேகவுண்டன்பாளையத்தில் லதா பிளேட் வாங்கி

வீடு கட்டியிருந்த பேரிலும், பாப்பிநாய்க்கனஅள்ளியில் அப்பா வாங்கிய நிலத்தின் பேரிலும் வழக்கு போட்டேன். அந்த வழக்கை வாபஸ் பெற்ற பிறகு தான் என் இரண்டு மகள்களுக்கும் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். என் இரண்டு மகள்களுக்கும் பாப்பாரப்பட்டியில் உள்ள திருமண மண்டபத்தில் திருமணம் செய்தேன். நான் வேலைக்கு போகவில்லை. இல்லத்தரசியாக உள்ளேன்.

7) 2012லிருந்து 2015 வரை எனது கணவர் 15ஆயிரம் சம்பளம் வாங்கியிருப்பார். என் பெரிய மகள் Teacher Treaning படித்துள்ளார். சின்ன பெண் பி.ஈ முடித்துள்ளார். எனது இரண்டு மகள்களும் கவர்மெண்ட் கல்லூரியில் படித்தார்கள். எனக்கு வீட்டை தவிர விவசாய நிலம் எதுவும் இல்லை. என் பெரிய மகளுக்கு 4.4.2016ல் நல்ல சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். என் சின்னமகளுக்கு 02.02.2017ல் திருமணமானது என்றால் சரிதான். இரண்டு மகள்களுக்கும் தலா 20 பவுன் போட்டிருப்பேன். என் மகள்களின் திருமண செலவை பெண் வீட்டார், மாப்பிளை வீட்டார் இருவரும் சேர்ந்து செய்தோம்.

8)என்னிடம் காட்டப்படும் தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ் 198 /2012 வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட மெமோவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். அந்த மெமோவில் தாவா ஏ,பி அயிட்ட சொத்துக்கள் குறித்து நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டதாகவும வழக்கை திரும்ப பெற்று கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கேசை வாங்கிய பிறகு சமாதனமாக போகலாம் என்று சொன்னார்கள். ஆனால் சமாதனமாக

போகவில்லை. நான் தாக்கல் செய்த மெமோவின் நகல் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*